







கிருஷ்ணகிரி முதல் நீலகிரி வரை மேற்கு மண்டலத்தில் உள்ள 21 கழக மாவட்டங்களில், 61 சட்டமன்றத் தொகுதிகளுக்கு உட்பட்ட ஒன்றிய, நகர, பகுதி, பேரூர்களில் கிளைவார்டுகளுக்கும் பாகங்களுக்கும் இளைஞர் அணி நிர்வாகிகள் தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணியை மேற்கொள்ளும் வகையில், இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் 9 பேருக்கும் தலா 2 கழக மாவட்டங்கள் என பிரித்தளிக்கப்பட்ட நிலையில், அவர்கள் சம்பந்தப்பட்ட மாவட்டங்களில் இருந்து பெற்ற நிர்வாகிகள் பட்டியலை, இளைஞர் அணி தலைமையகமான ‘அன்பகத்தில்’ வழங்கி வருகின்றனர். அங்கு அவர்கள் மேற்கொண்ட பணிகளை, 13.10.2025 அன்று கழக இளைஞர் அணி செயலாளர் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் அறிக்கையாக வழங்கி, கள நிலவரம் குறித்து விளக்கினர். மேலும் இந்தக் கூட்டத்தில் மற்ற மண்டலங்களிலும் இந்த முறைப்படியே நிர்வாகிகளைத் தேர்வுசெய்யலாம் என முடிவு செய்யப்பட்டது.










கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களது அறிவுறுத்தலின் பேரில், கழக இளைஞர் அணிச் செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆலோசனையில், 2026 சட்டப்பேரவைத் தேர்தல் பணிகள் குறித்து, புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகளுக்கான பயிற்சிப் பாசறைக் கூட்டங்கள், பகுதி வாரியாக நடைபெற உள்ளன. அந்த வகையில், சென்னை மேற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட ஆயிரம்விளக்கு சட்டப்பேரவைத் தொகுதியில் உள்ள ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதிக்கான பயிற்சிப் பாசறைக் கூட்டம் மாநில துணைச் செயலாளர் ஜோயல் முன்னிலையில், அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வருகின்ற 2026 தேர்தலை எப்படி எதிர்கொள்வது, அவற்றில் இளைஞர்களுக்கான பணிகள் என்ன, SIR போன்ற முன்னெடுப்புகளை எவ்வாறு எதிர்கொள்வது என்று தகவல்தொழில்நுட்ப அணி ஆலோசகர் கோவி. லெனின் இளைஞர்களிடம் எடுத்துரைத்துப் பேசினார். ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் எழிலன் நாகநாதன், சென்னை மேற்கு மாவட்ட கழக செயலாளர் சிற்றரசு, பிரகாஷ் உள்ளிட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் பகுதி செயலாளர் அன்பு துரை ஆகியோர் இந்நிகழ்வில் பங்கேற்றனர். மேலும் இந்நிகழ்வில் கலந்து கொண்ட புதிய நிர்வாகிகள் அனைவருக்கும் Minute Book வழங்கப்பட்டது.

### ஃபாக்ஸ்கான் நிறுவனம் தமிழ்நாட்டில் 15 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு!

# நம் பயணத்தில் இது மற்றுமொரு மைல்கல்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

சென்னை, அக்.15-

ஃபாக்ஸ்கான் நிறுவனம் தமிழ்நாட்டில் 15 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு செய்து, 14 ஆயிரம் வேலை வாய்ப்புகளை உருவாக்கவுள்ளதாக அறிவித்ததையொட்டி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைத்தளப் பதிவு வருமாறு :-

**இதுதான் திராவிட மாடலின் செயல்பாடு. தமிழ்நாட்டைத் தேர்வு செய்தமைக்காகவும், எங்களுடன் இணைந்து எதிர்காலத்தை வடிவமைக்க முடிவெடுத்தமைக்காகவும் நன்றி. தமிழ்நாட்டைத் தெற்காசியாவின் உற்பத்தி மற்றும் புதுமைக்கான மையமாக உயர்த்துவதற்கான நம் பயணத்தில் இது மற்றுமொரு மைல்கல்!**

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

# நூற்றாண்டு காணும் லட்சுமி காந்தன் பாரதி, இ.ஆ.ப. (ஓய்வு)!

## வலைதளத்தில் – முதல்வர் மு.க. ஸ்டாலின் வாழ்த்து!

சென்னை, அக்.15-

நூற்றாண்டு காணும் லட்சுமி காந்தன் பாரதி, இ.ஆ.ப. (ஓய்வு) அவர்களுக்கு வாழ்த்து தெரிவித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:

**நூற்றாண்டு காணும் லட்சுமி காந்தன் பாரதி! அனைவருக்கும் எடுத்துக்காட்டான காந்திய வாழ்வு!**

**விடுதலைப் போராட்ட வீரர் மொழிப்போர்த் தீரர் நாவலர் சோமசுந்தர பாரதியார் அவர்களின் பெயரன், விடுதலைப் போராட்டத் தியாகிகள் கிருஷ்ணசாமி பாரதி, லட்சுமி பாரதி ஆகியோரின் மகன் என நாட்டுக்காக உழைத்த குடும்பத்தின் வழித்தோன்றலாகப் பிறந்து, 16 வயது மாணவராக விடுதலைப் போராட்டத்தில் தொடங்கி, மதுரை மாவட்ட ஆட்சியர், தலைவர் கலைஞரின் முதல் தனிச் செயலாளர் எனப் பரந்த பெருவாழ்வுக்குச் சொந்தக்காரரான அவரை வாழ்த்தி மகிழ்கிறேன்.**

**நாட்டுப்பற்றில் உறுதி, மக்கள் தொண்டில் நாட்டம், எளிமை என நானிலமும் போற்றும் நற்பண்புகளைக் கொண்ட லட்சுமி காந்தன் பாரதி அவர்களது வாழ்க்கையை, இன்றைய தலைமுறை தனக்கான பாடமாகக் கொள்ள வேண்டும்.**

இவ்வாறு அப்பதிவில் – முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.






துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.10,2025) சென்னை காரம்பாக்கம் நவரத்தன்மல் ஜெயின் வளாகத்தில் நடைபெற்ற விழாவில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் சார்பில் பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கினார், இந்நிகழ்வில் அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், சு.முத்துசாமி, மா.சுப்பிரமணியன், மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் க.கணபதி. ஜோசப் சாமுவேல், மருத்துவர் நா.எழிலன், இரா.மூர்த்தி, ஏ.எம்.வி.பிரபாகரராஜா, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர், திருமதி.பெ.அமுதா. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவர் பூச்சி எஸ்.முருகன், துணை மேயர் மு.மகேஷ்குமார், நில நிர்வாக ஆணையர் டாக்டர்.கே.எஸ்.பழனிசாமி. மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ரஷ்மி சித்தார்த் ஜகடே, மண்டலக்குழுத் தலைவர் வே.ராஜன், அரசு அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உடனிருந்தனர்.

## ‘திராவிட மாடல்’ அரசு பொறுப்பேற்றது முதல் இன்று வரை

# 19 லட்சம் பயனாளிகளுக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது!

## சென்னையில் நடைபெற்ற விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பெருமிதம்!

***சென்னை, அக்.15 -***

***சென்னையில் மதுரவாயல் தொகுதியைச் சேர்ந்த 4,000 பொதுமக்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கும் நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கி வாழ்த்திப் பேசினார்.***

***அப்போது அவர், “நம் அரசு அமைந்த நாள் முதல், இன்று வரை தமிழ்நாடு முழுவதும் சுமார் 19 லட்சம் பட்டாக்களைக் கொடுத்திருக்கிறோம்” என்று அவர் குறிப்பிட்டார்.***

***துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரை வருமாறு: -***

இன்றைக்கு மதுரவாயல் பகுதிக்கு வருகை தந்து, 1,600 பேருக்கும் வீட்டுமனைப் பட்டாக்களை வழங்குகின்ற விழாவில், உங்களை எல்லாம் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியும், பெருமையும் அடைகிறேன்.

உண்ண உணவு, உடுத்த உடை, இருக்க இடம் இவை மூன்றும்தான் ஒவ்வொரு மனிதனுக்கும் இதுதான் அடிப்படையான தேவை. இதில் உடை, உணவு பெரும்பாலும் அனைவருக்கும் கிடைத்து விட்டது என்று சொல்லலாம். ஆனால், குடியிருக்க இடம் வேண்டும், அதுவும் பட்டாவுடன் வேண்டும் என்பதுதான் இன்று இருக்கின்ற மக்களின் மிகப்பெரிய பிரச்சினையாக இருந்து கொண்டிருக்கிறது. குறிப்பாக, வீட்டுக்குப் பட்டா இல்லை என்றால், அதனால் ஏற்படுகின்ற வேதனைகளைப் பட்டியலிட முடியாது. மின்இணைப்பு வாங்க முடியாது, குடிநீர் இணைப்பு சாதாரணமாகக் கிடைத்து விடாது, வங்கியில் கடன் கிடைப்பது கடினம், வேறு பிரச்சினைகள் காரணமாக எப்போது இடத்தை அப்புறப்படுத்த சொல்வார்களோ என்ற பதற்றம் கூடுதலாக இருக்கும்.

### உங்களைத் தேடி பட்டா

இன்றைக்கு உங்களின் அந்த கஷ்டங்கள், பதற்றங்களை எல்லாம் போக்கி, பட்டா கொடுப்பதற்காக உங்களைத் தேடி வந்துள்ளோம். இன்று பட்டா கிடைத்ததால், இன்று இரவு உங்களின் வீடுகளில் நீங்கள் நிம்மதியாக, மகிழ்ச்சியாக உங்கள் குடும்பத்துடன் தூங்கலாம். பட்டா என்பது உங்களின் நெடுநாள் கோரிக்கை மட்டுமல்ல, அது உங்களின் உரிமை. இன்றைக்கு, நம் முதலமைச்சர் அவர்களும், நம் திராவிட மாடல் அரசும் உங்களின் உரிமையை நிலைநாட்டி இருக்கிறது. இந்த மதுரவாயல் பகுதியைப் பொறுத்தவரை, மிக வேகமாக வளர்ந்து வருகிற பகுதி. இந்தப் பகுதி எந்த அளவுக்கு வளர்கிறதோ, அதற்கு இணையாக உங்களின் வாழ்க்கைத் தரமும் வளர வேண்டும் என்பதுதான் நம் முதலமைச்சர் அவர்களின் ஒரே இலட்சியம்.



### ஒரு லட்சத்து 40 ஆயிரம்

மதுரவாயல் மட்டுமல்ல, சென்னை மற்றும் அதை சுற்றியுள்ள பகுதியில் குடியிருக்கும் மக்களுக்கு ஒரேயடியாக பட்டா கொடுக்க வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் எங்களுக்கெல்லாம் உத்தரவிட்டார்கள். சென்ற ஆண்டு நம் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில், ஒரு குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழுவின் உதவியுடன் நம் முதலமைச்சர் அவர்கள் பலமுறை ஆய்வுக் கூட்டங்களை நடத்தினார்கள். அந்தக் குழுவின் பரிந்துரையைக் கொண்டு, நம் முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் அடிப்படையில், சென்னை மாவட்டத்தில் மட்டும், கடந்த ஓராண்டில் ஒரு லட்சத்து 40 ஆயிரம் பயனாளிகளுக்கு, பட்டா வழங்கியுள்ளோம் என்பதை, இங்கு நான் மகிழ்ச்சியுடன் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டுள்ளேன்.

சென்னை மட்டுமல்ல, பிற மாவட்டங்களில் புறம்போக்கு நிலத்தில் வசிக்கின்ற மக்களுக்கும் உடனடியாக பட்டா வழங்க வேண்டும் என்று நம் முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார். நம் முதலமைச்சர் தலைமையிலான, நம் அரசு அமைந்த நாள் முதல், இன்று வரை தமிழ்நாடு முழுவதும் சுமார் 19 லட்சம் பட்டாக்களைக் கொடுத்திருக்கிறோம் என்பதை இங்கு பெருமையோடு கூறிக்கொள்ள விரும்புகிறேன். இதற்குத் துணையாக இருந்து வழிகாட்டிய முதலமைச்சர் அவர்களுக்கும், அண்ணன் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்களுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும், அரசு அதிகாரிகளுக்கும், இந்த நேரத்தில் எனது பாராட்டுகளையும், நன்றியையும், வாழ்த்துகளையும், பயனாளிகளின் சார்பாக தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படி ஏழை, எளிய மக்களின் முன்னேற்றத்துக்காக டாக்டர் கலைஞர் வழியில், நம் முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து உழைத்துக்கொண்டு இருக்கிறார். கழக அரசைப் பொறுத்த வரைக்கும் ஒவ்வொரு நாளும் மக்களின் அன்பும், ஆதரவும் பெருகிக்கொண்டே இருக்கின்றன. அரசைத் தேடி மக்கள் வரவேண்டும் என்ற நிலைமையை மாற்றி, இன்றைக்கு மக்களைத்தேடி நம் அரசு வந்துகொண்டு இருக்கிறது. அந்த நிலைமையை முதலமைச்சர் அவர்கள் உருவாக்கி இருக்கிறார்.

### குறை தீர்க்கும் முகாம்

கடந்த இரண்டு மாத காலமாக, ‘உங்களுடன் ஸ்டாலின்’ என்ற பெயரில், தமிழ்நாடு முழுவதும் 10 ஆயிரம் மக்கள் குறைதீர்க்கும் முகாம்களை வெற்றிகரமாக நடத்தி இருக்கிறோம். அந்த முகாம்களில் வருகிற மனுக்களை முடிந்தவரை, எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் அவற்றைப் பரிசீலனை செய்து வருகிறோம். முதலமைச்சர் அவர்களின் தனிப்பட்ட மேற்பார்வையில், அனைத்து அரசு அதிகாரிகளுடன் ஆய்வுக் கூட்டங்களை நடத்தி, முதலமைச்சரின் தனி கவனத்துடன் அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

குறிப்பாக, சமீபத்தில் தொடங்கப்பட்ட வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு அவர்களின் வீட்டுக்கே சென்று ரேஷன் பொருட்களைக் கொடுக்கின்ற முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தை நம் முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தினார். மகளிர் வளர்ச்சிக்காக மகளிர் விடியல் பயணத் திட்டம், மகளிரின் கல்வி உதவிக்காக புதுமைப்பெண் திட்டம், மாணவர்களின் கல்விக்காக தமிழ்ப்புதல்வன் திட்டம், பள்ளி குழந்தைகளுக்கான முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், மகளிரின் பொருளாதார உரிமைக்காக கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் என்று பல்வேறு திட்டங்களை முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்திக் காட்டியிருக்கிறார்.

இப்படி பல்வேறு முற்போக்கான திட்டங்களின் காராணமாக, இன்றைக்கு இந்தியாவிலேயே நம் தமிழ்நாடு 11.19 சதவிகித வளர்ச்சியுடன் முதலிடத்தில் சிறப்பாக விளங்கிக்கொண்டு இருக்கிறது. ஆகவே, உங்களுக்கு இன்னும் அதிகமாக உழைக்க நம் முதலமைச்சர் அவர்களும், நாங்களும் காத்து இருக்கிறோம். இந்த அரசு என்றைக்கும் மக்களாகிய உங்களுக்குத் துணையாக இருக்கும். எனவே, இந்த அரசுக்குத் துணையாக நீங்கள் என்றைக்கும் இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, பட்டாக்களைப் பெற வந்துள்ள உங்கள் அத்தனை பேருக்கும் மீண்டும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்து, இந்த நிகழ்ச்சியை இவ்வளவு சிறப்பாக ஏற்பாடு செய்த அமைச்சர் பெருமக்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், மக்கள் பிரதிநிதிகளுக்கும், அரசு அதிகாரிகளுக்கும் மீண்டும் என் பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்து, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்திப் பேசினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், சு.முத்துசாமி, மா.சுப்பிரமணியன், சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் காரம்பாக்கம் கணபதி, மருத்துவர் எழிலன், ஐட்ரீம்ஸ் மூர்த்தி, ஜோசப் சாமுவேல், பிரபாகர்ராஜா, வீட்டு வசதி வாரியத் தலைவர் பூச்சி முருகன், துணை மேயர் மகேஷ்குமார், மாநகராட்சி மண்டல குழு தலைவர்கள் நொளம்பூர் ராஜன், டி.கே.மூர்த்தி, அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அமுதா ஐ.ஏ.எஸ்., நில நிர்வாக ஆணையர் கே.எஸ்.பழனிசாமி ஐ.ஏ.எஸ்., நில அளவு மற்றும் நிலவரி திட்டத்தின் இயக்குநர் தீபக் ஜேக்கப் ஐ.ஏ.எஸ்., சென்னை மாவட்ட ஆட்சியர் ரஷ்மி சித்தார்த் ஐ.ஏ.எஸ்., தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் கணேசன் ஐ.ஏ.எஸ்., வட்டாரத் துணை ஆணையாளர் அப்தாப் ரசூல் ஐ.ஏ.எஸ்., மாவட்ட வருவாய் அலுவலர் கீதா, குணசேகரன், பாலவாக்கம் விஸ்வநாதன், பாலவாக்கம் மனோகரன், வேளச்சேரி பாஸ்கர், வீரமணி, சங்கர் கணேஷ், ராமாபுரம் ரவி, நவராஜ், நரேன் உள்பட பலரும் கலந்து கொண்டனர்.



> **பட்டா என்பது உங்களின் நெடுநாள் கோரிக்கை மட்டுமல்ல, அது உங்களின் உரிமை. இன்றைக்கு, நம் முதலமைச்சர் அவர்களும், நம் திராவிட மாடல் அரசும் உங்களின் உரிமையை நிலைநாட்டி இருக்கிறது.**





துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதியைச் சேர்ந்த 1000 பொதுமக்களுக்கு, 62–ஆவது வார்டு, சிந்தாதரிப்பேட்டை அய்யா தெருவில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இதில் தயாநிதி மாறன் எம்.பி., மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, பகுதிச் செயலாளர் மதன்மோகன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.